1972 ஏப்ரல் 3]

அரிசன விடுதி மாணவர்களுக்குச் சத்துணவு.

* 852 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நல விடுதியில் உள்ள மாணவர்களுக்கு ஊட்டச்சத்து அளிக்கும்பொருட்டு முட்டை, பால் வழங்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 5 வீதம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பெரும்பான்மையான மாணவர் விடுதிகளுக்குத் தேவையான முட்டைகள் ஒரு சில சமயங்களில் கிடைப்பதில்லை. ஆகவே, பால், முட்டைக்குப் பதிலாக அது கிடைக்கவில்லை என்றால், ஆட்டு இறைச்சி கொடுக்க அரசாங்கம் தகுந்த ஆலோசனை வழங்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முட்டை கொடுக்க வேண்டும் அல்லது பால் கொடுக்க வேண்டும். முட்டையும், பாலும் கொடுக்கக்கூடிய இடத்தில் மூன்று தினங்கள் முட்டையும், இரண்டு தினங்கள் பாலும் என்று மாற்றி வெள்ளி, சனி, நீங்கலாகக் கொடுக்கப்படுகிறது. இந்த ஊட்டச் சத்துப் பொருளுக்குப் பதிலாக மாமிசம், இறைச்சி கொடுப்பது என்றால் அதை ஒழுங்காக விடுதியைக் கண்காணிப்பவர்கள் செய்ய முடியாது என்ற காரணத்தால் முட்டையும், பாலும் கணக்காகக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அது கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : அரிசன மாணவர்களுக்கு மாத்திரம் ஊட்டச் சத்து கொடுப்பதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றிய அளவில் எத்தனை ஏழை மாணவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், அரசு, இன்னும் கேர், யூனிசெப் போன்ற ஸ்தாபனங்கள்

எல்லாம் சேர்ந்து ஜாதி மத வித்தியாசம் இன்றி எல்லா ஏழை மாணவர்களுக்கும் ஊட்டச் சத்துக் கொடுக்க அரசு திட்டத்தை வகுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது நலத்துறை இலாகா சம்பந்தப்பட்டது அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : அரிசன ஹாஸ்டலில் வேலை செய்யக் கூடிய சமையல்காரர்களுக்கு ரொம்பக் குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுகின்ற காரணத்தால் ருசியாகச் சமையல் செய்யக்கூடிய சமையல்காரர்கள் இருப்பதில்லை என்று சொல்லப் படுகிறது. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தி நல்ல ருசியாகச் சமைக்கக்கூடிய சமையல்காரர்களைப் போட முன்வருவர்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படி ஒன்றும் கிடையாது. பின்தங்கிய மாணவர்கள் விடுதியிலிருக்கக்கூடிய சமையல்காரர்களுக்குக் கொடுக்கப்படும் அதே சம்பளவிகிதம் அரிசன மாணவர் விடுதிகளில் பணியாற்றும் சமையற்காரர் களுக்கும் தற்போது கொடுக்கப்படுகிறது. இடையில் பின்தங்கிய மாணவர் விடுதி சமையற்காரர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுத்தார்கள். அரிசன மாணவர் விடுதிகளில் உள்ள சமையற் காரர்களும் அதே சம்பள விகிதம் வேண்டுமென்று கேட்டு இப் போது அதே அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. இதுதான் காரணமேதவிர ருசியாக சமைக்கிறார்களா இல்லையா என்ற பிரச்சினை இல்லை. மாணவர்கள் குறை சொல்ல வேண்டுமென்று நினைத்தால் ருசியாக இருப்பதைக்கூட ருசியாக இல்லை என்று கூறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சத்துணவைப்பற்றி யது, நீங்கள் சமையற்காரருக்குப் போய்விட்டீர்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு இந்த சத்துணவு வழங்கப்படுவதில் சனிக்கிழமை முட்டை வழங்கு வதில்லை என்று சொன்னார்கள். சனிக்கிழமை விரதநாள் என்று சொல்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வழங்கவில்லையா அல்லது வேறு ஏதாவது காரணமா ?

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உயர்த்தப்பட்டிருக்கின்ற 5 ரூபாயில் வாரத்திற்கு 5 நாட்கள்தான் கொடுக்க முடியும். அதிகமாகப் பணமிருந்தால் இன்னும் 7 நாட்களுக்குக் கூடக் கொடுக்கலாம். பணம் குறைவாக இருப்பதால் ஏதாவது இரண்டு நாட்கள் விடப்படவேண்டும் என்று சொல்லும்பொழுது, மாணவர்களின் விருப்பம் அது வெள்ளி, சனி என்று இருக்கட்டும் எனக் கூறுகிறுர்கள். ஆகவே வெள்ளி, சனிக்கிழமைகளில் வழங்காமல் மற்ற நாட்களிலே வழங்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படி சத்துணவு கொடுக்கப்பட்டும்கூட இந்தப் பின்தங்கியவர்கள் வசிக்கும் மாணவர் விடுதிகளிலும், அரிசனங்கள் வசிக்கும் மாணவர்கள் விடுதிகளிலும் இருப்பவர்களுக்குச் சோகை நோய் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன்காரணமாகப் பல மாணவர்கள் வருந்துகிறுர்கள், அப்படிப்பட்ட சோகைநோய் எத்தனைபேருக்கு இருக்கிறது என்ற கணக்கையெடுத்து அதை நீக்குவதற்கு இன்னும் அதிகச் சத்துள்ள உணவு வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரண்டு சமுதாய மாணவர்களுக்கும்தான் இந்த 5 ரூபாய் உயர்த்திச் சத்துணவு போடும் திட்டம் இருக்கிறது. மாணவர்களுக்குச் சத்துக் குறைவாக இருப்பதால் வளர்ச்சியில்லாமல் பல நோய்கள் வருகிறது என்பதை அறிந்துதான் இந்த சத்துணவு போட வேண்டுமென்று, மிகவும் சத்து அடங்கியுள்ள முட்டையும் பாலும் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத்துக் கொடுக்கிறோம். அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இப்பொழுது இப்படிப்பட்ட சத்துணவு பெற்ற பிறகு மாணவர்கள் எப்படி இருக்கிறுர்கள் என்பதை அவ்வப்பொழுது பரிசிலனைசெய்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Supply of milk powder in slum areas

*853 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether milk powder and milk prepared therefrom are being distributed in slum areas in Madras City by any Private Agencies; and

(b) if so, the details thereof?